DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Cross Examination of Witness

20.01.2021

அசா. 2 - கருப்புசாமி

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26, 27, 28, 29, 30 ஆகிய எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

12.08.2012 ம் தேதி அரசு சார் கருவூல அலுவலகத்தில், காலை 10 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெற்ற TNPSC குரூப்-2 க்கான கேள்வித்தாளை நான் மட்டுமே பெற்றுச் சென்றுள்ளேன் என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதி பிற்பகல் 2.30 மணி முதல் 5.30 மணி வரை TNPSC யால் மற்றொரு தேர்வு நடத்தப்பட்டது என்றால், சரிதான். TNPSC யால் அன்று பிற்பகல் நடத்தப்பட்ட தேர்வுக்கும் மொபைல் யூனிட்டின் பொறுப்பு அதிகாரி நான்தான் என்றால், சரிதான். அன்று பிற்பகல் நடத்தப்பட்ட தேர்விற்காக எனக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்கள் எவை எனில், கம்பைய நல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி ஆகும். 12.08.2012 ம் தேதி பிற்பகலில் நடைபெற்ற தேர்விற்கான வினாத்தாளை நான் எங்கு, யாரிடமிருந்து, எத்தனை மணிக்குப் பெற்றேன் என்றால், அரசு கருவூலத்தின் கருவூல

அலுலவரிடமிருந்து மதியம் சுமார் 1.30 மணியளவில் பெற்றேன். மதியம் 1.30 மணிக்கு வினாத்தாளை வாங்கிய பின்னிட்டு தேர்வு மையங்களில் யார், யாரிடம் எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால், மதியம் 2 மணிக்கு முன்பாக அந்தந்த தேர்வு மையங்களில் தலைமை கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்தேன். பிற்பகல் நடைபெற்ற தேர்விற்காக 3 தேர்வு மையங்களையும் நான் ஆய்வு செய்தேனா என்றால், ஆய்வு செய்தேன். பிற்பகல் நடைபெற்ற தேர்விற்கு அந்தந்த தேர்வு மையங்களின் தலைமை ஆசிரியர்கள் தான், தலைமை தேர்வு கண்காணிப்பாளர் என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதி காலையில் நடைபெற்ற தேர்விற்கான வருவாய் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலகர்கள் பிற்பகலில் நடைபெற்ற தேர்விற்கும் என்னுடன்தான் பணியில் இருந்தார்கள் என்றால், சரிதான். அன்றைய தினம் பிற்பகல் 2.30 அளவில் நடைபெற்ற தேர்வின்போது நானும் தேர்வு மையத்தில் தான் இருந்தேன் என்றால், சரிதான். அதுதான் எனக்கு ஒதுக்கப்பட்ட பணி என்றால், சரிதான். முதல் தேர்வு முடிக்கப்பட்ட பின்னர் எத்தனை மணிக்கு விடைத்தாள்களுடன் தேர்வு மையங்களிலிருந்து புறப்பட்டு, எத்தனை மணிக்கு கருவூலத்திற்கு வந்தேன் என்றால், மதியம் 1 மணி அளவில் புறப்பட்டு 1.30 மணி அளவில் கருவூலத்திற்கு வந்தேன். நீதிமன்ற நடவடிக்கையின்போது பொய் சாட்சியம் அளிக்கக்கூடாது என்பது எனக்குத் தெரியும் என்றால், சரிதான். அரூர் பேருந்து நிலையம், கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கம்பையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றிலிருந்து எவ்வளவு தூரம் என்றால்,

கம்பையநல்லூரிலிருந்து அரூர் பேருந்து நிலையத்திற்கு சுமார் 30 கிலோமீட்டர் தொலைவு ஆகும். ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியிலிருந்து அரூர் பேருந்து நிலையத்திற்கு சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவு ஆகும். 12.08.2012 ம் தேதி பிற்பகலில் TNPSC ஆல் நடத்தப்பட்ட தேர்வானது இந்து சமய அறநிலையத்துறையின் சைவ மற்றும் வைணவ பிரிவிற்கான தேர்வு என்றால், சரிதான். மேற்படி தேர்வானது அன்று பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது என்றால், சரிதான். 12.02.2018 ம் தேதி நடைபெற்ற இரண்டு தேர்வுகளுக்குமான வினாத்தாள்களை அரசு கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கும், தேர்விற்கு பின்னர் விடைத்தாள்களை கருவூலத்தில் திரும்ப ஒப்படைப்பதற்கும் நான்தான் முழுப்பொறுப்பு அதிகாரி என்றால், சரிதான். நான் மேற்கண்ட பணிகளை செய்ததற்கான ஆவணங்கள் அனைத்தும் அரசு கருவூலத்தில் உள்ளது என்றால், சரிதான். ஒரு பொருளை கைப்பற்றுவதற்கும், ஒப்படைப்பதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ஒரு பேப்பர் என்பது வேறு, ஒரு பக்கம் என்பது வேறு என்றால், சரிதான். 59 பக்கங்கள் என்பது வேறு, 59 பேப்பர்கள் என்பது வேறு என்றால், சரிதான். கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கம்பையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றிலிருந்து அரசு கருவூலம் எவ்வளவு தொலைவு என்றால், கம்பைய நல்லூரிலிருந்து சுமார் 30 கிலோமீட்டர் தூரத்திலும், ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

காவல் துறையினர் முதன் முதலில் என்னை விசாரித்தபோது, நான் ஆஜர் செய்த வினாவிடைத்தாளையும், பணத்தையும், செல்போனையும் போலீசார் கைப்பற்றினார்கள் என கூறியுள்ளேன் என்றால், சரிதான். காவல் துறை விசாரணையின்போது எதிரி சுரேஷ்குமார் அடையாளம் காட்டிய எதிரிகள் விவேகானந்தன் மற்றும் ரங்கராஜ் ஆகிய இருவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள்கள் தலா 1 வீதம் என மொத்தம் 2 செட்டுகள் கைப்பற்றப்பட்டன என்றால், சரிதான். எதிரி சுரேஷ்குமார் என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் 59 பக்கங்கள் கொண்ட கையால் எழுதப்பட்ட வினாவிடைத்தாள் என்றும், அது 29 பேப்பர்கள் கொண்டது என்றும் சொன்னால், சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 59 பேப்பர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதிய கைப்பற்றுதல் மகசரில் 200 கேள்விகளுக்கான வினாவிடைத்தாள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஈரோடு JM.3 நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி சுரேஷ்குமார் என்னிடம் கொடுத்த 59 பக்கங்கள் கொண்ட தாள்களில் எத்தனை வினாக்கள் இருந்தது என்று நான் எண்ணிப்பார்க்கவில்லை என்றும், ஆனால் அந்த வினாக்களில் 200 வினாக்கள் இல்லை என்றும், தேர்விற்கு கொடுக்கப்பட்ட வினாத்தாளில் 200 வினாக்கள் ஆகும் என்றும் சாட்சியம் அளித்தேன் என்றால், சரிதான். அ.சா.ஆ.6 மகசரில் கண்டுள்ள பொருட்கள் என்னால், எதிரி சுரேஷ்குமாரிடமிருந்து பெற்று ஒப்படைக்கப்படவில்லை என்றும், எனவே தான் வழக்கின் முக்கிய சங்கதிகளைப் பொறுத்து முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மகசரில் 12.08.2012

தேதி 14.30 முதல் 15.00 மணி வரை கம்பையநல்லூர் காவல் நிலையத்தில் நான் ஆஜரில் இருந்ததாக கண்டுள்ளது என்றால், மொபைல் யூனிட் ஆபிசர் என்பதால் அனைத்து இடங்களிலும் சென்று வந்து கொண்டிருந்தேன். நான் மொபைல் யூனிட் ஆபிசர் என்ற முறையில் காவல் நிலையம் செல்ல எனக்கு தனிப்பட்ட செயல்முறை ஆணைகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால், தேர்வை உரிய முறையில் நடத்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால், அ.சா.ஆ.3 செயல்முறை ஆணையின்படி எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி ஆணைப்படி அதிகாரம் எனக்கு அளிக்கப்படவில்லை என்றால், சரியல்ல. அ.சா.ஆ.6 மகசரில் கண்டுள்ள சொத்துக்கள், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் நான் உடன் இல்லாததால்தான், அந்த நடைமுறைகளைப் பொறுத்து முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தேர்வு முடிந்தவுடன் எவ்வளவு நேரத்தில் அரசு கருவூலத்தில் தேர்வு விடைத்தாள்களை ஒப்படைக்க வேண்டும் என்றால், விடைத்தாள்களை சேகரித்தவுடன் காலதாமதமின்றி உடனடியாக அரசு கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும். தேர்வு விடைத்தாள்களை கருவூலத்தில் யார் ஒப்படைக்க வேண்டும் என்றால், தேர்வு மையத் தலைவர் மற்றும் மொபைல் யூனிட் அதிகாரி என்ற முறையில் எனக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்களின் விடைத்தாள்களை நான் தான் ஒப்படைக்க வேண்டும். 12.08.2012 ம் தேதியன்று எந்த தேர்வு மையத்தில் முதன் முதலில்

விடைத்தாள்களை சேகரித்தேன் என்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை. 3 தேர்வு மையங்களிலிருந்தும் ஒன்றன் பின் ஒன்றாக சேகரித்து ஒப்படைத்தேன். முதல் தேர்விற்கான விடைத்தாள்களை ஒப்படைத்த பின்னர்தான் மதியம் நடந்த 2ம் தேர்விற்கான வினாவிடைத்தாள்களை கருவூலத்திலிருந்து பெற்றேன் என்றால், சரிதான். 2ம் தேர்வு முடிந்த பின்னர் மேற்கண்ட 3 தேர்வு மையங்களிலிருந்தும் விடைத்தாள்களை சேகரித்து கருவூலத்தில் நான் ஒப்படைத்தேன் என்றால், சரிதான். முதல் தேர்வு மற்றும் 2ம் தேர்விற்கான விடைத்தாள்களை முறையே எத்தனை மணிக்கு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால், முதல் தேர்விற்கான விடைத்தாள்கள் பிற்பகல் 2 மணிக்கும், 2ம் தேர்விற்கான விடைத்தாள்கள் மாலை 6 மணிக்கும் ஒப்படைக்கப்பட்டது. தேர்வு சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளுக்கான போக்குவரத்திற்கும், எனக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தைதான் பயன்படுத்த வேண்டும் என்றால், சரிதான். அன்றைய தினமும் அந்த வாகனத்தைதான் பயன்படுத்தினேன் என்றால், சரிதான். மாலை 6 மணிக்கு விடைத்தாள்களை சார் கருவூலத்தில் ஒப்படைத்த பின்னர் திரும்பவும் கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால், அரூர் பேருந்து நிலையத்தில் இவ்வழக்கு சம்பந்தமான விசாரணை இருந்ததால் திரும்பவும் கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு வரவில்லை. அந்த சமயத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனத்தைதான் பயன்படுத்தினேனா என்றால், அதைப் பயன்படுத்தி தான் அரூர் பேருந்து நிலையத்திற்கு சென்றேன். முதல் தேர்விற்கான விடைத்தாள்களை ஒப்படைத்த பின்னர், கம்பையநல்லூர் காவல்

நிலையத்திற்கு வந்தேனா என்றால், வந்தேன். அரசு கருவூலத்திலிருந்து எனக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனத்தில் கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு வருவதற்கு சுமார் 45 நிமிடம் ஆகும் என்றால், சரிதான். 2 மணிக்கு அரசு கருவூலத்தில் முதலாவது தேர்வு விடைத்தாள்களை ஒப்படைத்து பின்னர் 2 ம் தேர்விற்கான வினாத்தாள்களுடன் எத்தனை மணிக்கு 3 தேர்வு மையங்களுக்கும் வந்தேன் என்றால், 2.30 மணிக்கு வந்தேன். 2 ம் தேர்விற்கான வினாத்தாள்களை தேர்வு மையங்களில் ஒப்படைத்த பின்னர் எத்தனை மணிக்கு கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றால், இறுதியாக கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் வினாத்தாள்களை ஒப்படைத்து விட்டு அடுத்த 10 நிமிட நேரத்தில் கம்பையநல்லூர் காவல் நிலையம் வந்தடைந்தேன். ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் தேர்வு மையத்தில் எத்தனை மணிக்கு 2 ம் தேர்விற்கான வினாத்தாள்களை ஒப்படைத்தேன் என்றால், பிற்பகல் 2.15 மணியளவில் ஒப்படைத்தேன். அ.சா.ஆ.4 புகாரானது எங்கு வைத்து, எப்போது எழுதப்பட்டது என்றால், கம்பையநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து பிற்பகல் சுமார் 2.45 மணியளவில் எழுதினேன். அ.சா.ஆ.4 புகாரை எழுதி முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால், 10 நிமிடம் ஆனது. அ.சா.ஆ.4 புகாரில் யார், யார் சாட்சிக் கையொப்பம் செய்தார்கள் என்றால், வருவாய் ஆய்வாளர் உமாராணி சாட்சிக் கையொப்பம் செய்தார். வேறு யார் சாட்சிக் கையொப்பம் செய்தார்கள் என்ற ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.4 புகாரில் 59 பேப்பர்கள் கொண்ட வினாவிடைத்தாள்கள் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். புகாரை நான்

தாக்கல் செய்த பின்னர் எனக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் வழங்கப்பட்டது என்றால், சரிதான். எவ்வளவு நேரம் கழித்து முதல் தகவல் அறிக்கையின் நகல் வழங்கப்பட்டது என்றால், சுமார் 1 மணி நேரம் கழித்து வழங்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில், காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் என்ற இடத்தில் 14.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் புகார் கொடுத்தபோது 59 தாள்கள் கொண்ட வினாவிடைத்தாள்களை ஒப்படைத்தேன் என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் பெறுவதற்கு முன்பாகவே 59 தாள்கள் கொண்ட வினாவிடைத்தாள்களை நான் ஒப்படைத்தற்காக அ.சா.ஆ.6 மகசரில் என்னிடம் கையெழுத்து வாங்கப்பட்டது என்றால், சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றும், மகசர் தயார் செய்யப்படவில்லை என்றும், ஏற்கனவே உமாராணி சாட்சிக் கையொப்பம் செய்த புகாரானது இந்த வழக்கை ஜோடனை செய்வதற்கு போதுமானதாக இல்லாததால், அது மறைக்கப்பட்டு இந்த வழக்கிற்கு தகுந்தவாறு அ.சா.ஆ.4 புகார் தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. உமாராணி அவர்கள் சாட்சிக் கையொப்பம் செய்து என்னால் கொடுக்கப்பட்ட புகார்தான் இந்த வழக்கின் முதல் தகவல் என்றால், சரியல்ல. அ.சா.ஆ.4 புகாரானது புலன் விசாரணைக்கு பின்னிட்டு உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. 26, 27 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக சொல்லப்பட்ட பிறகு அரூர் பேருந்து நிலையத்திலிருந்து முதலில் நாங்கள் எங்கு சென்றோம் என்றால், தானிப்பாடிக்கு சென்றோம். அரூரிலிருந்து

தானிப்பாடிக்கு எவ்வளவு தூரம் என்றால், 30 கிலோ மீட்டர் ஆகும். தானிப்பாடிக்கு நான் எவ்வாறு பயணம் செய்தேன் என்றால், எனக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனத்தில் தான் பயணம் செய்தேன். அரூரிலிருந்து, தானிப்பாடிக்கு என்னுடன் யார் யார் பயணித்தார்கள் என்றால், வருவாய் ஆய்வாளர் உமாராணி என்னுடன் வந்தார். காவல் துறையினர் அவர்களுடைய வாகனத்தில் தனியாக வந்தனர் என்றால், சரிதான். அரூரிலிருந்து தானிப்பாடிக்கு எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால், இரவு 7 மணியளவில் புறப்பட்டோம். தானிப்பாடியை நாங்கள் எத்தனை மணிக்கு சென்றடைந்தோம் என்றால், இரவு 8 மணியளவில் சென்றடைந்தோம். தானிப்பாடியை அடைந்தவுடன் 27 வது எதிரி விவேகானந்தன் வீடு எங்குள்ளது என்று விசாரித்து அறிந்தோமா என்றால், விசாரித்து அறிந்தோம். 27 வது எதிரி விவேகானந்தன் வீடு எந்த திசையை நோக்கி இருந்தது என்றால், வெளியூர் என்பதால் எனக்கு திசைகள் தெரியவில்லை. அந்த வீட்டிற்கு கதவு எண் இருந்ததா என்றால், இருந்தது. அந்த வீடு ஓட்டு வீடா அல்லது மாடி வீடா என்றால், மாடி வீடு ஆகும். அந்த வீட்டிற்கு நாங்கள் சென்றதாக சொல்லப்படும் சமயத்தில் அந்த  வீடு பூட்டப்பட்டிருந்ததா அல்லது திறந்திருந்ததா என்றால், திறந்திருந்தது. நான் அந்த வீட்டிற்குள் செல்லவில்லை என்றால், நான் வீட்டிற்கு வெளியில் தான் இருந்தேன். 27 வது எதிரி ஆஜர் செய்ததாக சொல்லப்படும் சா.பொ.8 ஆவணங்களை எங்கிருந்து எடுத்து வந்தார்கள் என்றால், வீட்டிலிருந்து எடுத்து வந்தனர். வீட்டில் குறிப்பாக எங்கிருந்து எடுக்கப்பட்டது என்றால், எனக்குத் தெரியாது. அந்த வீடு காம்பவுண்ட் போடப்பட்ட வீடா

என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது மணி என்ன இருக்கும் என்றால், இரவு மணி சுமார் 8.30 இருக்கும். மகசரை யார் எழுதினார்கள் என்றால், யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மகசரில் என்ன எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். அந்த மகசரில் 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள் என்று எழுதப்பட்டதா அல்லது 59 பேப்பர்கள் கொண்ட வினாவிடைத்தாள் என்று எழுதப்பட்டதா என்றால், 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள் என எழுதப்பட்டது. கைப்பற்றதாகச் சொல்லப்படும் வினாவிடைத்தாளானது 59 பேப்பர்கள் கொண்டது என்றால், சரியல்ல. 59 பக்கங்கள் கொண்டது. 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள் கைப்பற்றப்படவில்லை, 59 பேப்பர்கள் கொண்ட வினாவிடைத்தாள் தான் கைப்பற்றப்பட்டது என்றால், சரியல்ல. கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் வீட்டிற்கு அருகாமையில் கடைகள், வீடுகள் உள்ளனவா என்றால், உள்ளன. கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் வீட்டிற்கு மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டதா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எங்கள் முன்னால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வாளர் கைப்பட எழுதினாரா அல்லது உடன் வந்தவர்கள் கைப்பட எழுதினார்களா என்றால், உடன் வந்தவர்கள் கைப்பட எழுதினார்கள். அவ்வாறு கையால் எழுதப்பட்ட மகசரில் எதிரியிடம் கையொப்பம் பெற்றனரா என்றால், டைப் அடித்த பேப்பரில் எதிரியிடம் கையொப்பம் பெற்றார்கள். கையால் எழுதப்பட்ட ஆவணங்களை வைத்து டைப் செய்யப்பட்ட ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்றால், சரிதான். கையால் எழுதப்பட்ட ஆவணங்களை வைத்து காவல் நிலையத்தில் டைப்

செய்யப்பட்ட ஆவணங்கள் உருவாக்கப்பட்டது என்றால், சரியல்ல. கையால் எழுதப்பட்ட ஆவணங்களை வைத்து, எங்கு வைத்து டைப் செய்யப்பட்ட ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்றால், பக்கத்தில் எங்கோ சென்று டைப் செய்து வந்தார்கள். எங்கு வைத்து, யாரால் டைப் செய்யப்பட்டது என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். அதை எத்தனை மணிக்கு டைப் செய்து கொண்டு வந்து என்னிடம் காட்டப்பட்டது என்பதை குறிப்பாக என்னால் கூற முடியாது என்றால், சரியல்ல. 8.30 மணிக்கு டைப் செய்து கொண்டு வந்து காண்பித்தனர். காவல் துறையினரின் விசாரணையின்போது கையால் எழுதப்பட்ட மகசர்களை எடுத்துச் சென்று டைப் செய்து கொண்டு வந்தார்கள் என நான் கூறியுள்ளேனா என்றால், இல்லை. காவல் துறையினரின் விசாரணையின்போது கையால் எழுதப்பட்ட மகசர்கள் மற்றும் டைப் செய்து கொண்டு வரப்பட்ட மகசர்கள் ஆகியவற்றை என்னிடம் காட்டி விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். கையால் எழுதப்பட்ட ஆவணங்கள், டைப் செய்யப்பட்ட ஆவணங்களுடன் என் முன்னிலையில் ஒப்பீடு செய்யப்பட்டதா என்றால், ஒப்பீடு செய்யப்பட்டதா என்று நான் கவனிக்கவில்லை. கையால் என்ன எழுதப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால், தெரியும். டைப் செய்தது சரியாக இருந்தது. கையால் எழுதப்பட்டதும், டைப் செய்ததும் ஒன்றாக இருந்தது என்று மகசரில் நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால், இல்லை. கையால் எழுதப்பட்ட ஆவணத்தை மீண்டும் காவல் துறையினர் என்னிடம் காண்பிக்கவில்லை என்றால், சரிதான். தானிப்பாடியிலிருந்து மறுபடியும் எங்கே சென்றோம் என்றால், திருக்கோவிலூர்

சென்றோம். தானிப்பாடியிலிருந்து, திருக்கோவிலூர் எவ்வளவு தூரத்திலுள்ளது என்றால், 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருக்கோவிலூர் நகராட்சியா, பேரூராட்சியா அல்லது சிற்றூராட்சியா என்றால், பேரூராட்சி ஆகும். திருக்கோவிலூருக்கு நான் எனக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனத்திலும், காவல் துறையினர் அவர்களது வாகனத்திலும் சென்றோம் என்றால், சரிதான். திருக்கோவிலூர் 26 வது எதிரி ரங்கராஜனின் ஊர் என்று எனக்குத் தெரியும் என்றால், சரிதான். திருக்கோவிலூருக்கு நாங்கள் சென்றடையும்போது மணி என்ன இருக்கும் என்றால், இரவு 9.30 மணி இருக்கும். அந்த வீடு ஓட்டு வீடா அல்லது மாடி வீடா என்றால், ஞாபகம் இல்லை. அந்த வீட்டிற்கு அருகாமையில் வீடுகள் மற்றும் கடைகள் இருந்தனவா என்றால், வீடுகள் இருந்தது. அந்த வீடு குறித்து காவல் ஆய்வாளர் மாதிரி வரைபடம் தயார் செய்தாரா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. திருக்கோவிலூரில் நாங்கள் சென்றடைந்த 26 வது எதிரி ரங்கராஜனின் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. அங்கு மகசரை காவல் துறையினர் கையால் எழுதினரா என்றால், எழுதினர். அதில் யார், யார் கையொப்பம் செய்தோம் என்றால், நானும், வருவாய் ஆய்வாளர் உமாராணியும் கையொப்பம் செய்தோம். அந்த கையால் எழுதப்பட்ட மகசரில் 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள் என்று எழுதப்பட்டதா அல்லது 59 பேப்பர்கள் கொண்ட வினாவிடைத்தாள் என்று எழுதப்பட்டதா என்றால், 59 பேப்பர்கள் கொண்ட வினாவிடைத்தாள் என எழுதப்பட்டது. திருக்கோவிலூரில் எங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு நாங்கள் நேராக கம்பையநல்லூர்

காவல் நிலையம் சென்றோம் என்றால், சரிதான். அன்றைய தினம் நாங்கள் அரூரிலிருந்து தானிப்பாடி, திருக்கோவிலூர் சென்ற பின்னர் வேறு எங்கும் செல்லவில்லை என்றால், சரிதான். திருக்கோவிலூரில் 26 வது எதிரி வீட்டில் கையால் எழுதப்பட்ட மகசரைத் தவிர வேறு எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றால், அங்கும் டைப் செய்யப்பட்ட மகசர் தயார் செய்யப்பட்டது. கையால் எழுதப்பட்ட ஆவணங்களை வைத்து, எங்கு வைத்து டைப் செய்யப்பட்ட ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்றால், பக்கத்தில் எங்கோ சென்று டைப் செய்து வந்தார்கள். எங்கு வைத்து, யாரால் டைப் செய்யப்பட்டது என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகசரில் 2 வது காலத்தில் 12.08.2012 ம் தேதி 22.30 மணிக்கு திருவரங்கம் ரங்கராஜன் வீட்டில் கைப்பற்றியதாக உள்ளது என்றால், சரிதான். அது போன்று திருவரங்கம் என்ற ஊருக்கு நாங்கள் செல்லவில்லை என்றால், சரியல்ல. திருக்கோவிலூரிலுள்ள ஒரு பகுதிதான் திருவரங்கம் ஆகும். திருக்கோவிலூர் பேரூராட்சியில் திருவரங்கம் என்ற ஒரு ஊர் உள்ளதாக கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்றால், சரியல்ல. திருவரங்கம் என்ற ஊரானது சங்கராபுரம் என்ற தாலுக்காவைச் சார்ந்தது என்றால், சரிதான். சங்கராபுரத்தில், திருவரங்கம் என்ற ஊரில் திருக்கோவிலூர் என்ற பகுதியே கிடையாது என்றால், சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் 26, 27 வது எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், அவர்களை 30 வது எதிரி அடையாளம் காட்டவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. 30 வது எதிரியை நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில்,

சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் 26, 27 மற்றும் 30 எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அவர்களிடமிருந்து எவ்வித பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை என்றால், சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு, பின்யோசனை செய்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும், அதில்தான் கையொப்பம் செய்தேன் என்றும், அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு ஆவணங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால், சரியல்ல. பயிற்சி முகாம்களில் கொடுக்கப்படும் கையால் எழுதப்பட்ட மாதிரி வினாத்தாள் ஒன்றைப் பார்த்து, அது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அந்த தேர்விற்கு தயார் செய்யப்பட்ட வினாத்தாள்களின் பதிவு என தவறாகக் கருதி, என்னுடைய ஆர்வக் கோளாறினாலும், நன்றாகப் பணியாற்றுகிறேன் என்பதை பிரதிபளிக்கும் நோக்குடன் தவறாக கொடுக்கப்பட்ட புகாரை வைத்து முறையற்ற புலன்விசாரணையின் அடிப்படையில் இந்த வழக்கின் மூலம் எழுந்துள்ளது என்றும், இதற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால், சரியல்ல.

மேற்கண்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 13, 14, 15, 16, 20, 21 ஆகிய எதிரிகளால் அவ்வாறாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.